



சென்னை – காஞ்சிபுரம் – செங்கல்பட்டு – திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.க.வின் இளம் பேச்சாளர்களுக்காக, நேற்று முன்தினம், சென்னை– அன்பகத்தில் ‘சமூக ஊடகப் பயிற்சி அமர்வு’ ஒன்றை, கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தினார்கள். அந்த அமர்வில் தற்போதைய அரசியல் சூழலில், தி.மு.க.வின் பணிகளையும் பொதுச் சேவையையும் எவ்வாறு திறம்பட மேற்கொள்வது என்பது குறித்து விவாதித்தார்கள்.



நாகை மாவட்டம் நாகை சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தை நாகை மாவட்டக் கழக செயலாளர் என்.கௌதமன் திறந்து வைத்தார். உடன் நாகை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இரா.மாரிமுத்து, தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், திருமருகல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செல்வ. செங்குட்டுவன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு!

*நாமக்கல், ஜூன் 18 -*

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், நாமக்கல் மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் வரும் 28.06.2026 - ஞாயிற்றுக்கிழமை நவீன தமிழ்நாட்டில் சிற்பி தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் மாணவர்களுக்கு கருத்தரங்கம் திருச்செங்கோடு சி.எச்.பி. காலனியில் உள்ள கொங்கு திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இதுகுறித்து ஆலோசனை நடத்தும் வகையில் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தலைமையில், ஆலோசனைக் கூட்டம் வருகிற ஜூன் 20 ஆம் தேதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு திருச்செங்கோட்டில் உள்ள மாவட்டக் கழக அலுவலகமான தளபதி அரங்கில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் கழக வளர்ச்சி, மக்கள் நலப் பணிகள் மற்றும் வரவிருக்கும் அரசியல் முன்னெடுப்புகள் மற்றும் மற்றும் நாமக்கல் மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் வரும் 28.06.2026 ஞாயிற்றுக்கிழமை நவீன தமிழ் நாட்டில் சிற்பி தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கம் நடத்துவது பதிகுறித்து ஆலோசனை நடத்தப்படவுள்ளது.

இக்கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு கே.எஸ். மூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

# தமிழ்நாட்டில் “ஸ்லிப் மோடு சோபா மாடல்” ஆட்சியில் சந்தி சிரிக்கும் சட்ட ஒழுங்கு!

## தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஶ்ரீதர் அறிக்கை!

*மயிலாடுதுறை, ஜூன் 18 -*

தமிழ்நாட்டில் பெண்கள், பெண் குழந்தைகள், சிறுமிகள் பாலியல் நாளுக்கு நாள் அதிகரித்து உள்ளது “ஸ்லிப் மோடு சோபா மாடல்” முதல்வருக்கு தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஶ்ரீதர் கண்டனம்.

இதுகுறித்து கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஶ்ரீதர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாடு முதல்வராக கவர்ச்சியில் வெத்து வெட்டு வார்த்தைகளின் வழங்கி ஆட்சிக்கு வந்த சோபா மாடல் முதல்வர் விஜய் ஆட்சியில்தமிழ்நாடு இதுவரை கண்டிராத மிகக் கேவலமான சட்டம் ஒழுங்கு சீரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது! பதவி ஏற்று 30 நாட்களுக்குள் தமிழ்நாட்டில் கொலை, கொள்ளை, பெண்கள், பெண் குழந்தைகள், சிறுமிகள் பாலியல் வன்கொடுமைகள் என நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த பாலியல் வன்கொடுமை ஏழைப் பெற்றோர்களின் வலியும், பச்சிளம் குழந்தைகளின் வேதனையும் உங்களுக்கு உறைக்கவில்லையா? பெத்தவங்களோட குமுறலும், நெஞ்சகப் பதற்றமும் புரியாத ஒரு இரக்கமற்றவர் முதல்வர் நாற்காலியில் அமர்ந்திருப்பது தமிழ்நாட்டின் சாபக்கேடு!, இந்த குற்றங்கள் பற்றிய கவலையும் இல்லை என்பதால் தான், இன்று தமிழ்நாட்டில் காமக்கொடூரர்களும், கொள்ளையர்களும் பயமின்றித் திரிகிறார்கள். தினந்தோறும் பத்திரிக்கை தொலைக்காட்சியில் பாலியல் கொடுமைகளும், கொலை, கொள்ளைகளும் அதிக அளவில் செய்தியாக வருகிறது. சேலத்தில் 50 மேற்பட்ட பெண்களுக்கு தவெக கட்சியைச் சேர்ந்தவர் பாலியல் தொல்லை கொடுத்தது ஆலந்தூரில் அவரது கட்சி பிரமுகர் கணவனை இழந்தபெண்ணிடம் அத்துமீறியது சிங்கப்பெண் படையை உருவாக்கிய சில தினங்களில் சிவகங்கையில் பெண் காவலருக்கே பாலியல் தொல்லை. நாகை கீழ்வேளூர் அருகே இருக்கையில் டிவி பார்த்த பெண்ணின் கழுத்தில் இருந்த தங்க செயினை பறிக்க முயன்ற தவெக பிரமுகர் மரத்தில் கட்டி வைத்து போலீசில் . ஒப்படைப்பு என சட்டம் ஒழுங்கு கழக இளைஞரணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறுவது போல் தமிழ்நாடு முழுக்க சட்டம் - ஒழுங்கு, வெண்டிலேட்டரில் வைக்கும் அளவுக்கு செத்துக் கொண்டிருக்கிறது. கடந்த ஐந்து ஆண்டு காலம் கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சியில் சட்டம் ஒழுங்கை சரியாக பராமரித்து தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உயர்த்தி வந்த நிலையில் தற்பொழுது கவர்ச்சியால், வெத்து வெட்டு பேச்சாள் ஆட்சிக்கு வந்த நடிகர் விஜய் இனியாவது சட்டம் ஒழுங்கு பிரச்சனையில் தூங்காமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பு குறித்து நீதி மன்றங்கள் கண்டனம் தெரிவிக்கும் வகையில் உள்ளது.

கழக தகவல் தொழில் நுட்ப அணி செயலாளர் முன்னாள் அமைச்சர் டி ஆர் பி ராஜா அறிவுறுத்தியுள்ளபடி கழக தகவல் தொழில்நுட்ப அணியை சேர்ந்தவர்கள் தவெக ஆட்சியின் சட்ட ஒழுங்கை பொதுமக்களுக்கு தெள்ளத் தெளிவாக தெரிவிக்கும் வகையில் சமூக வலைதளங்களில் பதிவிட வேண்டும் இவ்வாறு அந்த அறிக்கையில்கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஶ்ரீதர் கூறியுள்ளார்.

### கோவையில் கல்லூரி பகுதிகளில் கஞ்சா குரூப் நடமாட்டம்!

# சிங்கப்பெண் படை சீக்கிரம் வருமா...?

## கலக்கத்தில் கல்லூரி மாணவ - மாணவிகள்!

*கோவை, ஜூன் 18 -*

கோவையில் கல்லூரி பகுதிகளில் கஞ்சா குரூப் நடமாட்டம் உள்ளதால்

சிங்கப்பெண் படை சீக்கிரம் வருமா...? என் கல்லூரி மாணவ மாணவிகள் கலக்கத்தில் உள்ளனர்.

கோவை மாநகரில் அவிநாசி ரோடு, மேட்டுப்பாளையம் ரோடு, சத்தி ரோடு பகுதியில் அதிகளவு கல்லூரிகள் உள்ளன. இந்த கல்லூரிகளின் வேலை நேரம் மாலை சுமார் 4 மணிக்கு முடிவடைகிறது. அந்த நேரத்தில் கல்லூரி மாணவ, மாணவிகள் பஸ் ஸ்டாப், பொது இடங்களுக்கு வந்து செல்கிறார்கள். அப்போது கஞ்சா, சிந்த டிக், டிரக் போதை கும்பல் ஜாலியாக வலம் வருவதாக புகார் எழுந்துள்ளது. படிப்பை முடித்த ‘சீனியர்கள்’ சிலரும் கல்லூரி அருகே ரோட்டில் மாணவிகளை நோட்டம் விட்டு வலம் வந்து டார்ச்சர் தருவதாக தெரிய வந்துள்ளது.

பீளமேடு, சிட்ரா, காளப்பட்டி, நவ இந்தியா, ஹோப்ஸ், சரவணம்பட்டி, பாரதி பார்க் ரோடு, கோவைப் புதூர் பிரிவு பகுதிகளில் போதை கும்பல் சொகுசு பைக்குகளில் சுற்றி சுற்றி வருகிறார்கள். இவர்களை காவல்துறையினர் கண்டு கொள்வதில்லை, மாணவர்களை போல் இருப்பதால் காவல் துறையினரும் பெயரளவிற்கு கூட விசாரிப்ப தில்லை. ஹாஸ்டல் செல்லும் மாணவிகளை பின் தொடர்வது, சினிமாவுக்கு போகலாம் வா என அழைத்து தொந்தரவு செய்வது தொடர்வதாக தெரிகிறது. இவற்றை எல்லாமல் மாணவிகள் எதிர்கால பிரச்சினையை கருத்தில் கொண்டு வெளியே சொல்ல தயக்கம் காட்டுகிறார்கள்.

குறிப்பாக, வேறு மாவட் டங்களில் இருந்து கோவை வந்து வெளி ஹாஸ்டலில் தங்கி இருப்பவர்கள் பயத்தில் தவிக்கிறார்கள். காவல்துறையினர் கல்லூரி அருகேயுள்ள பஸ் ஸ்டாப் பகுதியில் வாகனங்களை நிறுத்தி அவ்வப்போது ஹெல்மெட், டிரிப்ள்ஸ் செக்கிங் பணிகளில் தீவிரம் காட்டி வருகிறார்கள். மாணவிகளை அச்சுறுத்தும் நபர்களை மடக்க போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை. மாநகரில் இரண்டு சிங்கப்பெண் சிறப்பு படை உள்ளது. இந்த படையினர் பல்வேறு இடங்களில் விழிப்புணர்வு பிரச்சாரத்தில் மட்டுமே ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் மாநகரின் அனைத்து ஏரியாக்களுக்கும் சென்று கண்காணிப்பது சிரமம்தான். ஆனால், தினமும் ஒரு பிரதான ரோடு என எட்டிபார்த்து விசாரிக்க முன் வரவேண்டும், அனைத்து மகளிர் காவலர்களும் கல்லூரி விடும் நேரங்களில் சோதனை செய்ய வேண்டும். மாணவிகள் பாதுகாப்பாக ஹாஸ்டல்களுக்கு செல்ல முடிகிறதா?, பொது இடங்களில் பாதுகாப்பான சூழல் இருக்கிறதா? என ஆய்வு செய்ய வேண்டும்.

கல்லூரி மாணவர்களை மிரட்டி சீனியர்கள் சிலர் அவர்கள் தங்கியுள்ள விடுதிகளில் புகுந்து தொந்தரவு தருவதாக தெரிகிறது. மாணவர்களின் அறையை ஆக்கிரமித்து செல்ல மறுப்பதாக தெரிகிறது. இந்த விவகாரத்தை காவல்துறையினர் கண்டு கொள்வதில்லையாம். இதுபோன்ற அடாவடியை தடுக்க மாநகர காவல் துறையினர் அதிரடி சோதனை நடத்த வேண்டும் என மாணவர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

### ‘திராவிட மாடல்’ ஆட்சியில் கொண்டுவரப்பட்ட

# கல்வித்திட்டங்களை கேள்விக் குறியாக்கும் த.வெ.க. அரசு!

## கழக மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி பேட்டி!

*திருப்பூர், ஜூன் 18 -*

திருப்பூர் மத்திய மாவட்ட கழக அலுவலகமான முரசொலி மாறன் வளாகத்தில் மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழறிஞர், செம்மொழி காவலர் கலைஞரின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு

மாவட்ட மாணவர் அணி சார்பில் “நவீன தமிழ் நாட்டின் சிற்பி” என்ற தலைப்பில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் பங்கேற்கும் மாபெரும் கருத்தரங்கம் மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் திருப்பூர் தெற்கு மாநகர கழகச் செயலாளர் டிகேடி மு.நாகராசன் பகுதி கழக பொறுப்பாளர், மாமன்ற உறுப்பினர் பி.ஆர்.செந்தில்குமார்,

மத்திய மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத், தெற்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் செ.திலகராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக மாணவர் அணி செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி, தலைமைக் கழக பேச்சாளர சென்னை எஸ்.கே. ஶ்ரீராம் கருத்துரையாற்றினர்.

கழக மாணவர் அணி செயலாளர் செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி கூறியதாவது : கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான கடந்த திராவிட மாடல் ஆட்சியில் முத்தான முன்னோடி திட்டமான அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி திட்டத்தின் மூலமாக நலிவடைந்த மற்றும் பட்டியல் இன ஏழை மாணவ, மாணவியர்கள் வெளி நாடுகளில் உயர்கல்வி பயில முழு செலவையும் ஏற்கும் வகையில் கொண்டு வரப்பட்ட உன்னதமான திட்டம் தற்போதைய தவெக ஆட்சியில் பெரும் கேள்விக்குறியாகியுள்ளது.

கடந்த 2020க்கு முன் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் இத்திட்டத்தின்

மூலம் வெறும் 2 நபர்கள் மட்டுமே பயனடைந்த நிலையில், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, விண்ணப்பித்த மாணவர்களை தனிப்பட்ட முறையில் ஊக்குவித்ததன் மூலம் பல கோடி ரூபாய் நிதி உதவியுடன் 386 மாணவ, மாணவியர்கள் பயனடைந்தனர். மேலும், 1000 மாணவ, மாணவியர்கள் வரை வெளி நாட்டுக்கு அனுப்பும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. ஆனால், தற்போதைய தவெக அரசு இத்திட்டத்திற்கான இறுதி தேதியை நீட்டிக்க மறுத்து மாணவர்களை தவிக்கவிட்டு கொண்டுள்ளது.

லண்டன் ஸ்கூல் ஆப் எகனாமிக்ஸ், ஹார்வர்ட் போன்ற உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களுக்கு ஏழை மாணவ, மாணவியர்கள் விண்ணப்பிக்கும் போது, அங்கிருந்து சேர்க்கைக்கான கடிதம் (ஆபர் லெட் டர்) வருவதற்கு ஒரு மாதத்திற்கும் மேலாக ஆகும் என்கிற அடிப்படை தகவல்கள் கூட தெரியாமல், த.வெ.க. அரசு விதித்துள்ள குறுகிய காலக்கெடுவால் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளுக்குச் செல்ல இருக்கும் ஏழை மாணவ, மாணவியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழக மாணவ, மாணவியர்களின் உயர்கல்வி திட்டத்தை முடக்க நினைக்கும் த.வெ.க. அரசின் செயல்பாடுகளை தி.மு.க. மாணவர் அணி கண்டிக்கிறது.

மும்மொழிக் கொள்கை மற்றும் பல்கலைக் கழகங்களின் அதிகாரத்தை பறிக்கும் விக்ஷித் பாரத் சிக்ஷா அதிஸ்தான் மசோதாவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வலியுறுத்தி, ஜூன் 23ம் தேதி சென்னை ஆளுநர் மாளிகை அருகில் தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. இதில், தமிழக மாணவர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும்.

ஜென்சி டிஎம்கே மீட் அப் நிகழ்ச்சி சென்னையில் இளைஞர்களுக்கு மண்டபங்கள் கிடைக்காத வகையில் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா தலையீடு இருந்ததால், தி.மு.க. சார்பில் இடவசதி வழங்கப்பட்டது. இது தி.மு.க. நிகழ்ச்சி அல்ல, தன்னெழுச்சியாக இளைஞர்களால் இப்போது மாவட்டம் தோறும் நடைபெற்று வருவது வரவேற்கத்தக்கது என்று கூறினார்.

### ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர்

# கே.இ.பிரகாஷிடம் பொதுமக்கள் கோரிக்கை மனு!

*ஈரோடு, ஜூன் 18 -*

ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷிடம் அத்திமரத்துார் பொதுமக்கள் ரயில்வே பாலத்தில் கம்பி நெட் அமைப்பால் கார் போக்குவரத்துக்கு ஏற்பட்ட தடையை நீக்க கோரி மனு அளித்தனர்.

அதில் எங்கள் பகுதியில் உள்ள ரயில்வே பாலம் கம்பத்து எண் 376/24 அத்திமரத்துரிலிருந்து குட்டக்காரம்பாளையத்திற்கு செல்லும் முக்கியமான பாதையாக உள்ளது. தற்போது அந்த பாலத்தில் கம்பி நெட் அமைத்து கார் உள்ளிட்ட நான்கு சக்கர வாகனங்கள் செல்ல முடியாத வகையில் தடை செய்யப்பட்டுள்ளது.

இதனால் ஊர் மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளது.

சுமார் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இவ்வழியை நம்பி தினசரி பயணம் செய்து வருகிறார்கள்.

இதனால் நீண்ட தூரம் செல்லவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அவசர தேவைகளுக்கு பெரும் இடையூறாக உள்ளது.


ஆகவே உடனடியாக ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் இப்பிரச்சனையை கவனித்து முன்பு போல் கார் செல்வதற்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஊர் பொதுமக்கள் சார்பில் கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு ஊர் பொது மக்கள் சார்பில் மனு அளிக்கப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா சி. இராமநாதன்

### ஜூன் 18 (2025)



மாணவர் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கியவர்.

இரண்டு முறை ஆவுடையார்கோவில் ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும், தலைமைக் கழகத்தில் சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினராகவும், தீர்மானக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

சென்னை சட்டக்கல்லூரியில் பயிலும் போது சட்டக்கல்லூரி வளாகத்தில் பேரறிஞர் அண்ணா சிலை வைத்திட பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, நெருக்கடி கால மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறை தண்டனை பெற்றவர்.

2025ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘அண்ணா விருது’ வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**